# கொள்வனவு அறிவித்தல்

## இலங்கை கடற்படை

### இலங்கை கடற்படைக்கு 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதில் இருந்து ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரைக்குமான களஞ்சியப் பொருட்களை விநியோகித்தல் தொடர்பாக உற்பத்தியாளர்கள், இறக்குமதியாளர்கள், வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் கேள்வி கோருதல்

1. இலங்கை கடற்படைத் திணைக்களத்தின் கொள்வனவு குழுத் தலைவரினால் கீழே குறிப்பிடப்படும் இலங்கை கடற்படைத் தளங்களுக்கும், நிறுவனங்களுக்கும் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதில் இருந்து ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரைக்குமான காலப்பகுதிக்கு கீழே குறிப்பிடப்படும் வோறு வோறு களஞ்சியப் பொருட்கள் ஒன்றையோ அல்லது அதற்கு மேற்பட்ட பொருட்களையோ ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் விநியோகிப்பதை உறுதி செய்யக்கூடிய இலங்கையின் வர்த்தக நிறுவனங்கள், இறக்குமதியாளர்கள் உற்பத்தியாளர்கள், ஒப்பந்தக்காரர்கள் போன்ற வழங்குனர்களிடமிருந்து விலைகள் கோரப்படுகின்றன. ஒவ்வொரு அலகுக்குமான விலைகளின் கீழ் சமர்ப்பிக்கும் விலைகளின் செல்லுபடியாகும் காலம் 2018 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதில் இருந்து ஜூன் மாதம் 30 ஆம் திகதி வரையிலாகும்.

(அ) தெரிவு செய்யப்பட்ட வழங்குனர்களினால் குறித்த களஞ்சியப் பொருட்கள் ராகம, வெலிசரையிலுள்ள இலங்கை கடற்படை மகாசென் இடைநிலை களஞ்சியச் சாலைக்கு ஒப்படைக்கப் படல் வேண்டும்.

(ஆ) இது தொடர்பாக கரிசனை காட்டுபவர்கள் ஒவ்வொரு வகையறாவுக்குமான மீளளிக்கப்படாத விண்ணப்பக் கட்டணமான ரூபா 2000.00 ஐ காசாக நிதிப் பணிப்பாளர், இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. என்பவரிடம் செலுத்தி பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01. என்பவரிடம் சமர்ப்பித்து 2017 ஒக்டோம்பர் மாதம் 04 திகதயில் இருந்து 2017 ஒக்டோம்பர் மாதம் 26 ஆம் திகதி வரை வாராந்த வேலை நாட்களில் காலை 10.00 மணி தொடக்கம் 14.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பெற்றுக் கொள்ள முடியும். உறிய முறையில் பூர்த்தி செய்யப்பட்ட பொது களஞ்சிய பொருட்களை கொள்வனவு செய்வதற்கான விண்ணப்பப் படிவங்களை கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு சமர்ப்பிக்க வேண்டும்.

2. 2018 ஆம் ஆண்டுக்கு ஒவ்வொரு நிறுவனத்துக்குமான தேவைகளின் அளவுகள் மற்றும் விபரங்கள் ஒவ்வொரு வகையறாவின் கீழும் தேவைப்படும் அளவுகள் விண்ணப்படிவத்துடன் வழங்கப்படும்.

### கேள்விப்பத்திர இலக்கங்களும் ஒவ்வொரு வகையறாவும்

| விடயங்களின் வகைப படுத்தல் இலக்கம் | விடயங்களின் வகைப படுத்தல் விடய விபரம் | முடிவுத் திகதியும் பத்திரங்களை திறக்கும் திகதியும் நேரமும |
|---|---|---|
| இகப/வழங்கல் /01/2018 | பெற்றரி | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /02/2018 | சுற்றுக்கம்பிகள் (Winding wires) | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /03/2018 | வீட்டினுள் பாவிக்கும் மின் வயர்கள் | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /04/2018 | பொறுத்திகள் - Switch(MCB, | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |

| | | |
|---|---|---|
| | MCCB, RCCB) | |
| இகப/வழங்கல் /05/2018 | குளியலறை உபகரணற்கள் | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /06/2018 | கணணி மற்றும் அதட்குரிய பொருட்கள் | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /07/2018 | டயர் டியுப் வகைகள் | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /08/2018 | கொன்டியுட் மற்றும் உதிரிப்பாகங்கள் | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /09/2018 | உருக்குக்கம்பி (கட்டிட நிர்மாணம்) | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /10/2018 | கைதொழிலுக்கு பாவிக்கப்படும் வாயு (Industrial gases) | 2017 ஒக்டோம்பர் 27, 10.00 மணி |
| இகப/வழங்கல் /11/2018 | கட்டிட பொருட்கள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /12/2018 | துப்புரவு செய்யும் உற்பத்திப் பொருட்கள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /13/2018 | தொலைப்பேசி கம்பி வகைகள், ட்ரொப்வயர், தொலைபேசி உதிரிப்பாகங்கள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /14/2018 | காரியாலய காகிதாதிகள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /15/2018 | அச்சுக்கடதாசி மற்றும் கொப்பிகள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /16/2018 | பலகை வகைகள் உள்நாட்டு | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /17/2018 | பொது பொறியில் உடமைகள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /18/2018 | ஒட்டும் உருளைக் கம்பிகள் (Welding electrodes) | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /19/2018 | பிவிசி குழாய் உதிரிப்பாகங்கள் | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /20/2018 | ஒட்டுப்பலகை வகைகள் உள்நாட்டு வெளிநாட்டு | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /21/2018 | பொதுவான பூச்சுவகைகள | 2017 ஒக்டோம்பர் 30, 10.00 மணி |
| இகப/வழங்கல் /22/2018 | தார் வகைகள் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /23/2018 | பெயாரிங்ஸ் (Bearings) | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /24/2018 | மின் குமிழ்கள் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /25/2018 | சிவிலின் (Roofing Sheets) | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /26/2018 | வாகன பூச்சுகளும் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /27/2018 | அச்சிடும் பொருட்கள் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |

| | | |
|---|---|---|
| இகப/வழங்கல் /28/2018 | **வெளிநாட்டு** பலகை வகைகள் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /29/2018 | ஜீ ஆர் பீ கண்ணாடி துரும்பு | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |
| இகப/வழங்கல் /30/2018 | வாகனத்தின் கூடுதலான பொருட்கள் | 2017 ஒக்டோம்பர் 31, 10.00 மணி |

3 ஒப்பந்தக்காரர்கள் பின்வரும் தகமைகளை பூர்த்தி செய்ய வேண்டும். (விலைகளை விமர்சிக்கும் போது இவ்விடயங்கள் கவனத்தில் கொள்ளப்படும்.)

i. அரச நிறுவனங்களுக்கு களஞ்சியப் பொருட்களை சிறப்பான முறையில் விநியோகித்தமை தொடர்பான 2 வருட அனுபவம்.

ii. நிலையான மூலதன வசதிகள்.

iii. ஒழுங்காக வரி செலுத்தியமைக்கான அறிக்கை

iv. போதுமான தொடர்பாடல் வசதிகள் (தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, தொலைநகல், மின் அஞ்சல்)

v. போதுமான களஞ்சிய சாலை வசதிகள்

vi. போதுமான தொழிலாளர் மற்றும் அலுவலக வசதிகள்

vii. போதுமான வகையில் போக்குவரத்து வாகன வசதிகள்

viii. வர்த்தக நிறுவனமாக பதிவு செய்து கொண்டுள்ள சான்றிதழ் அல்லது நிறுவன ரீதியாக ஒன்றிணைந்து செயற்பட்டமை தொடர்பான சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும். 3 வருடத்துக்கு மேற்பட்ட காலப்பகுதியில் தொடர்ந்து வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டமைக்கான சான்றுகளை சமர்ப்பிக்க வேண்டும்.

4 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும்போது பெறுமதி சேர்க்கப்பட்ட வரி (VAT) செலுத்துபவராக பதிவு செய்த இலக்கத்தை சமர்ப்பித்தல் கட்டாயமாகும். இவ்வாறு பதிவு செய்து கொள்ளாத விண்ணப்பதாரிகள் வரி விலக்களிக்கப்பட்டமை தொடர்பாக இறை வரித் திணைக்கள ஆணையாளரின் சான்றிதழை சமர்ப்பிக்க வேண்டும். மேலும் மேற்குறித்த தேவைகளை பூர்த்தி செய்யாத கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

5 விண்ணப்பதாரிகள் விலைகளை சமர்ப்பிக்கப்படும்போது கடித அட்டையின் இடது பக்கம் மேல் மூலையில் **“இலங்கை கடற்படைக்கு 2018 ஆம் ஆண்டுக்கான களஞ்சியப் பொருட்களை விநியோகிப்பதற்கான ஒப்பந்த விலைகளை சமர்ப்பித்தல்” (விடய விபரம்………………………) இகப/வழங்கல்/….. /ஆர்சீ /2018** கேள்விப்பத்திரப்பெட்டியில (டென்டர்) விண்ணப்பங்கள் திரக்கும் திகதி, நேரம் குறிப்பிட்டு பதிவுத் தபாலில் கீழ் காணும் முகவரிக்கு அனுப்ப வேண்டும். அல்லது குறித்த கேள்விப்பத்திரப்பெட்டியில் (டென்டர்) இட வேண்டும்

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை
இலங்கை கடற்படை தலைமையகம்,
த.பெ. எண் 593,
கொழும்பு 01.

6 குறித்த நேரம் முடிவடைந்த உடனேயே கேள்விப்பத்திரம் திறக்கப்படும். பிந்திக் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதுடன், அவை திறக்கப்படாமலேயே திருப்பிக் கொடுக்கப்படும். விண்ணப்பதாரிக்கோ அல்லது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிக்கோ கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும் இந்த சந்தர்ப்பத்திற்கு சமூகமளிக்க முடியும்.

7 உரிய முறையில் பூர்த்தி செய்யப்படாத விலைகோரல் ஆவணங்கள், உரிய எழுத்து மூல சான்றுகள் சமர்ப்பிக்கப்படாத பட்சத்தில் கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். விண்ணப்பங்களை ஏற்றல் அல்லது நிராகரித்தல் கேள்விச் சபைச் தலைவரின் அதிகாரத்துக்குட்பட்டது.

8 தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரிகளுடன் ஒப்பந்தம் கைச்சாத்திடல் தொடர்பாக பதிவுத் தபாலில் அறிவிக்கப்படும்.

9 கேள்விப் பத்திர விண்ணப்பங்களை எதுவித கொடுப்பனவுகளும் இன்றி பணிப்பாளர் நாயகம் (வழங்கல் மற்றும் சேவைகள்), இலங்கை கடற்படைத் தலைமையகம், கொழும்பு. என்னும் இடத்தில் பரிசீலிக்க முடியும்.

10. மேலதிக விபரங்களுக்கு் பணிப்பாளர் நாயகம் வழங்கல் மற்றும் சேவைகள், இலங்கை கடற்படைத் தலைமையகம், த.பெ. எண் 593, கொழும்பு 01, தொலைபேசி 012334995, பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள், தொலைபேசி 011 2212321, 011 2212326 மற்றும் பதில் பணிப்பாளர் வழங்கல் மற்றும் சேவைகள் தொடர்பு கொள்ளவும்.

11. இக்குறிப்பிட்ட ஒவ்வொரு வகையறாவுக்குமான விலைக்கோரல் தொடர்பான விபரங்களை கடற்படையின் இணையத்தளமான www.navy.lk யிலிருந்தும் பெற்றுக்கொள்ள முடியும்.

தலைவர்,
திணைக்களக் கொள்வனவுக் குழு,
இலங்கை கடற்படை
கொழும்பு 01